**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.29/2021 தேதி- 21.01.2026
(D.W.1) - வில்லியம்

குறுக்கு விசாரணை

1. வாதி வழக்கை தாக்கல் செய்யும் போது எத்தனை மாதம் வாடகை பாக்கி இருந்தது என்றால் 2019 -ல் 7 வது மாதத்தில் இருந்து என்றால் 5 வது மாதம் 2019 ல் இருந்து பாக்கி இருந்தது. நான் ஜனவரி மாதம் 2019 ஆம் ஆண்டு வாடகை பணத்திற்கு ரசீது ஏதும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திலும் வாடகை பணம் செலுத்தினேன் ஆனால் ரசீது வழங்கப்படவில்லை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாடகை பணம் செலுத்திய பிறகும் ரசீது வழங்கப்படாததால் ரசீது ஏதும் வழங்கவேண்டும் என்று அறிவிப்பு ஏதும் வழங்கினேனா என்றால் வழங்கவில்லை. மேற்சொன்ன 4 மாதம் வாடகை பணம் செலுத்தியதாகவும் அதற்காக ரசீதை வாதியிடம் கேட்டு அதை அவர் வழங்கவில்லை என்று நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நடத்தி வரும் கடை வாதி தேவாலயத்திற்கு உரிமைப்பட்ட சொத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் மேற்சொன்ன தேவாலயத்தில் உபதலைவராக எத்தனை ஆண்டுகள் பணியில் இருந்தேன் என்றால் 6 ஆண்டுகள் ஆகும். மேற்சொன்ன 6 ஆண்டுகள் யார் மேற்சொன்ன கடையை நடத்தி வந்தார் என்றால் நான் நடத்தி வந்தேன். ஒவ்வொரு மாத வாடகையும் தேவாலயத்தின் கணக்கில் கொண்டு வரப்படும் என்றால் சரிதான். மேற்சொன்ன கணக்கு புத்தகத்தை எழுதுபவர் மற்றும் பாராமரிப்பவர் யார் என்றால் பொருளாலர் ஆவார். வாடகை ஒப்பந்தம் பொதுவாக 3 ஆண்டுகள் காலஅவகாசத்துடன் போடப்படும் என்றால் சரிதான். 3 ஆண்டுகள் கால அவகாசம் முடிந்துவிட்டால் அதை புதிப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். என்னை வாடகை கட்டிடத்தில் இருந்து பலவந்தமாக அகற்ற வாதிகள் முயற்சி செய்தார்கள் என்று நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தேவாலயத்தில் மாதம் ஒருமுறை கமிட்டி மிட்டிங் மற்றும் ஆண்டுக்கு ஒருமுறை பொது குழு நடக்கும். மேற்சொன்ன பொதுகுழுவில் தேவாலயத்தில் உள்ள அனைத்து உறுப்பினருகளும் கலந்து கொள்ளுவார்கள். வாதி வழக்கை தாக்கல் செய்த பிறகு நான் மேற்சொன்ன பொதுகுழுவில் கலந்து கொள்வேனா என்றால் கலந்துகொள்வேன். நான் கடைசியாக

கலந்து கொண்ட பொதுகுழு எந்த ஆண்டில் நடைபெற்றது என்றால் 2019 -ல் நடைபெற்றது. அதன் பிறகு எந்த பொதுகுழுவிலும் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

3. கட்டிடம் சம்மந்தமாக பொதுகுழு கூட்டி வாடகை பணம் செலுத்தாததால் வாடகை கட்டிடம் சம்மந்தமாக எனக்கு அறிவிப்பு ஏதும் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் அறிவிப்பு வாடகை கட்டிடம் சம்மந்தமாக எனக்கு அனுப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் மேலும் 3 ஆண்டுகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்று நான் தேவாலயத்தில் மனு செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன மனு 3 ஆண்டுகள் வாடகை ஒப்பந்தம் முடிவு பெற்ற பிறகு நீட்டிக்கப்பட வேண்டும் என்று எந்த மனுவும் தேவாலயததில் என் தரப்பில் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் பிராமான வாக்குமூலத்தில் வெளியிடங்களில் இருந்து சில பண வரவு வரவேண்டி இருக்கு என்றும், நிறைய Stationary பொருள்கள் வைத்துள்ளதாக நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன தேவாலயத்திற்கு மனு கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க அஞ்சல் ஒப்புகை அட்டையோ அல்லது அஞ்சல் ரசீதோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நேரடியாக தான் தேவாலயத்தில் தாக்கல் செய்தேன்.

4. பி.வா.சா.ஆ.2 முதல் 6 வரையான ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட மனுக்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 2 முதல் 6 வரைக்கான மனுக்கள் ஏதும் நான் தேவாலயத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு வாடகைக்கு மேற்சொன்ன கட்டிடம் செல்லும் என்று தேவாலயத்தில் நடந்த பொதுகுழு கூட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் பொதுகுழுவில் நிர்ணயம் செய்யப்படாது கமிட்டி தான் அதை நிர்ணயம் செய்வார்கள். மேற்சொன்ன கட்டிடத்திற்கு ரூ.10,000/- க்கு மேல் வாடகை செலுத்த பல நபர்கள் தயாராக இருந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கை நீட்டிக்க வேண்டி பொய்யான சங்கதிகளுடன் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.